
இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் (கொ.மு.சு) – 2026 ஒத்தோபர்

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2026 ஒத்தோபரில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் ஆகிய இரண்டிலும் விரிவடைதல்களினை எடுத்துகாட்டுகின்றன

தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு) 2026 ஒத்தோபரில் 55.3 இனைப் பதிவுசெய்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் விரிவடைதலொன்றை எடுத்துக்காட்டுகின்றது. அனைத்துச் துணைச் சுட்டெண்களும் நடுநிலையான எல்லைக்கு மேலாக இருந்தமை மூலம், இவ்விரிவாக்கமானது பரந்த அடிப்படையில் அமைந்திருந்தது.

புதிய கட்டளைகள் துணைச் சுட்டெண்ணானது பருவகாலக் கேள்வியைப் பிரதிபலித்து புடவைகள் மற்றும் அணியும் ஆடை அத்துடன் உணவு மற்றும் குடிபானத் துறைகளின் தயாரிப்பினால் தூண்டப்பட்டிருந்தது. மேலும், புடவைகள் மற்றும் அணியும் ஆடைத் துறையில் பருவகாலக் கேள்வியினால் தூண்டப்பட்டு தயாரிப்புத் துணைச் சுட்டெண்ணானது ஒத்தோபரில் அதிகரித்தது. இதற்கு மேலதிகமாக, புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் வளர்ச்சியுடன் இசைந்துசெல்லும் விதத்தில், தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு துணைச்சுட்டெண்கள் விரிவடைந்தன. அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம் இக்காலப்பகுதியில் மேலும் நீட்சியடைந்து, உள்ளீடுகளுக்கான அதிகரித்த கேள்வியைப் பிரதிபலித்தது.

கொ.மு.சு
தயாரிப்பு
2026 ஒத்தோபர்
55.3



மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு

மாறி	2026 செத்	2026 ஒத்	+/-	போக்கு
கொ.மு.சு – தயாரிப்பு	**53.0**	**55.3**	+	**அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்**
புதிய கட்டளைகள்	51.0	55.0	+	அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்
உற்பத்தி	51.0	52.2	+	அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்
தொழில்நிலை	52.6	51.1	-	அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்
கொள்வனவுகளின் இருப்பு	50.0	56.1	+	நடுநிலையிலிருந்து அதிகரிக்கின்றது
நிரம்பலர்களின் விநியோக நேரம்	63.0	66.1	+	அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரவிருக்கும் பண்டிகை பருவ காலத்தின் போதான எதிர்பார்க்கப்படும் கேள்வியால் துணையளிக்கப்பட்டு, அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான தோற்றப்பாடானது சாதகமாகக் காணப்படுகின்றது.

உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு தயாரிப்புத் தொகுப்பு

நாடு/அதிகாரஎல்லை	போக்கு
உலகம்	அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்
இந்தியா	அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்
சீனா	அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்
ஐக்கிய அமெரிக்கா	அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்
ஐக்கிய இராச்சியம்	அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்
யூரோ வலயம்	அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்

மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2026 நவெம்பர் 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2026 ஒத்தோபரில் 62.5 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் விரிவாக்கமொன்றை எடுத்துக்காட்டியது.

கொ.மு.சு
பணிகள்
வியாபார நடவடிக்கைச் சுட்டெண்
2026 ஒத்தோபர்


62.5

நிதியியல் பணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திலிருந்து கிடைத்த குறிப்பிடத்தக்க பங்களிப்புக்களுடன், ஏனைய தனிப்பட்ட பணிகளில் மேம்பாடுகளினால் முதன்மையாகத் தூண்டப்பட்டு, வியாபார நடவடிக்கை விரிவடைந்தது.

தங்குமிடம், உணவு மற்றும் குடிபானப் பணிகள் அத்துடன் பொருட்கள் போக்குவரத்து என்பவற்றிலிருந்து கிடைத்த சாதகமான பங்களிப்புக்களுடன் ஒன்றிணைந்து, நிதியியல் பணிகளிலும் ஏனைய தனிப்பட்ட பணிகளிலும் விரிவாக்கமொன்றைப் பிரதானமாகப் பிரதிபலித்து, புதிய வியாபாரங்கள் வளர்ச்சியடைந்தன.

அதிகரிக்கின்ற தொழிற்பாடுசார் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு பல துணைத் துறைகளிடையே ஆட்சேர்ப்பினால் ஆதரவளிக்கப்பட்டு, தொழில்நிலை அதிகரித்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணியானது முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் உயர்வான வீதமொன்றில் வீழ்ச்சியடைந்தது.

nfhs;tdT Kfhikahsh; Rl;nlz; - gzpfs;



மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு

மாறி	2026 செத்	2026 ஒத்	+/-	போக்கு
கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)	**60.5**	**62.5**	+	**அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்**
புதிய வியாபாரங்கள்	60.9	59.8	-	அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்
தொழில்நிலை	54.0	56.1	+	அதிகரிக்கின்றது, உயர்ான வீதத்தில்
நிலுவையிலுள்ள பணி	49.4	48.1	-	வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில்
நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள்	76.2	74.7	-	அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பேண்டப்பொருளாதார நிலைமைகள், சுற்றுலாப்பயணி வருகைகளில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்புக்கள் மற்றும் வரவிருக்கும் பண்டிகைப் பருவகாலம் ஆகியவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்பட்டது. இருப்பினும், நிலவுகின்ற உலகளாவிய நிச்சயமற்றதன்மைகள் தோற்றப்பாட்டிற்கு தொடர்ந்தும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகளினைத் தோற்றுவிக்கின்றன.

உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு

நாடு/அதிகார எல்லை	போக்கு
உலகம்	அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்
இந்தியா	அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்
சீனா	அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்
ஐக்கிய அமெரிக்கா	அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்
ஐக்கிய இராச்சியம்	அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்
யூரோ வலயம்	அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்

மூலம்: எஸ் அன்ட் பி குளோபல், 2026 நவெம்பர் 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))

தொழில்நுட்பக் குறிப்பு:

முறையியல்

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

கொமுசு – தயாரித்தல், தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது,

கொமுசு – பணிகள் எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

சுட்டெண்

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

மாதிரி

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

மாறிகளின் வரைவிலக்கணங்கள்:

தொழில்நிலை : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை
கொள்வனவுகளின் இருப்பு : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்
நிரம்பலர் வழங்கல் நேரம் : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு
நிலுவையிலுள்ள பணிகள் : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள்
மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.